(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No. 1493/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் |
| க/பெ | : | சுப்பையா |
| கிராமம் | : | குறிஞ்சி குளம் |
| வட்டம் | : | ராதாபுரம் |
| சாதி | : | எஸ்.சி |
| அழைத்தல் | : | இல்லத்தரசி |
| மதம் | : | இந்து |
| வயது | : | 75 |

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 01 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது குறிஞ்சி குளத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மருமகன் ஆவார். அ.சா.2 என்னுடைய மகள் ஆவார். வழக்கின் எதிரி சுடலை என்னுடைய பேரன்

ஆவார். வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை )

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**</u>

கடந்த 2-11-2019 அன்று இரவு 8. 00 மணிக்கு சாட்சிகள் நாகமணி, மலர் விழி மற்றும் நீங்கள் விட்டில் இருந்த போது எதிரி நாய் கடித்ததின் சம்மந்தமாக உள்ள முன் விரோத்தில் அ.சா.2 யை கெட்ட வார்த்தையில் பேசி தலை முடியை இழுத்து அறிவாளால் வெட்ட முயன்றதாகவும் அதை தடுத்த சாட்சி அ.சா.1 யை வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும் சம்பவத்தை நீங்கள் நேரி ல் பார்த்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி உங்கள் உறவினர் என்பதால் உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> – இல்லை